# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

**AYIDHA EZHUTHU**

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550


UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

அக்டோபர் – 2018

21



visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

Scanned by CamScanner

# பொருளடக்கம்

1. திரிகடுகத்தில் வாழ்வியல் சிந்தனைகள்

*முனைவர் க.சகாய கிரேஸி - 1

2. நாலடியார் காட்டும் வாழ்வியல்

*முனைவர் அ.ஜான்சிமேரி - 4

3. குறுந்தொகை காட்டும் முல்லைத் தலைவி

*முனைவர் செள.ஜான்சிராணி - 7

4. சங்க இலக்கியங்கள் கட்டும் இறப்புகுறித்த வாழ்வியல் நிகழ்வுகள்

*முனைவர் ஜெ.அருள் இருதய ஜெயந்தி - 10

5. திருக்குறள் கா!_டும் மனித மாண்புகள்

*முனைவர் தே.ராஜசீலி - 13

6. இயேசு காவியத்தில் வாழ்வியல் கூறுகள்

*அருட்சகோதரி முனைவர் இ.அல்போன்சாள் - 15

7. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

*அ.கிருத்திகா - 18

8. சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்

*முனைவர் ம.தனலட்சுமி - 20

9. இனக்குழு மக்களின் வாழ்வியல் சிந்தனையில்
வேட்டையாடுதலும் - பாதீடும்

*முனைவர் க.குமரகுருபரன் - 22

10. இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்

*முனைவர் மா.பாப்பா - 26

11. இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

*முனைவர் செ.ரெஜினா - 29

12. பெண் எனும் பெருந்தெய்வம் – வள்ளலார் பாரதி ஒப்பீடு

*முனைவர் நா.பா.மஞ்சுளா - 32

13. நாலடியார் நவிலும் இல்லற விழுமியங்கள்

*முனைவர் பெ.சுபாசினி - 35

14. இல்லாள் கட்டமைப்பு :
நான்மணிக்கடிகையை முன்வைத்த ஆய்வு

*அ.இளவரசி - 38

15. சங்க இலக்கியங்களும் தமிழ்ச்சமூகம் சார் வாழ்வியல் நெறிகளும்

*சோ.இலக்கியா - 41

Scanned by CamScanner

# சங்க இலக்கியங்கள் கட்டும் இறப்புகுறித்த வாழ்வியல் நிகழ்வுகள்

*முனைவர் ஜெ.அருள் இருதய ஜெயந்தி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பெரியகுளம், தேனிமாவட்டம்.

சங்க இலக்கியங்கள் வாழ்வின் பலநிலைகளையும் தொட்டுக் காட்டுவன. மாந்தரின் அகப்புறமன உணர்வுகளை வெளிச்சமிட்டுக் காட்டுவன. மனிதவாழ்வின் ஒவ்வொரு கூறுகளையும் தொட்டுச் செல்வன. மனிதன் வாழ்ந்த வாழ்க்கையையும், வாழவேண்டிய முறைகளையும் எடுத்துக் கூறுவன. மனிதவாழ்வின் இறுதிமுடிவாம் இறப்பு தொடர்பான நிகழ்வுகளையும் சுட்டிக்காட்டுவன. இதனை இக்கட்டுரை ஆராய்கிறது.

**இறப்பு:-**

மனிதன் பிறக்கின்றபொழுதேஅவனது இறப்புமுடிவுசெய்யப்படுகிறது. வாழும் பொழுதுநிகழும் நிகழ்வுகளைப் போலவே இறப்பின் போதும் பலவிதமானபழக்கவழக்கங்களைசங்ககாலமக்கள் செய்துவந்தனர். அவை,

பாடைகட்டுதல்
வெள்ளறுவைபோர்த்தல்
சாப்பறைமுழக்கல்
தாழியிற் கவித்தல்
நடுகல் வணக்கம்
வாள் போழ்ந்தடக்கல்
தென்புலத்தார் கடன்
எனும் பலவகையின.

**பாடைகட்டுதல்:-**

சங்ககாலத்தில் இறந்தோரின் உடலைப் பாடையில் கிடத்திச் சுடுகாட்டிற்குஎடுத்துச் சென்றனர். இப்பாடை'கால்கழிகட்டில்'என்றுஅழைக்கப்படுகிறது. கள்ளிச்செடிகள் நிறைந்தசுடுகாட்டில் அப்பாடை இறக்கிவைக்கப்பட்டது. புறநானூறுகுறிப்பிடும்

"கள்ளிபோகியகளரியம் பறந்தலை
வெள்ளில் நிறுத்தபின்றை" (புறநானூறு 360)

எனும் வரிகளின் மூலம் இதனைஅறியலாம்.

**வெள்ளறுவைபோர்த்தல்:-**

இன்றையநாளில் இறந்தபிணத்தின் மீதுகோடித் துணிபோர்த்தும் வழக்கம் உள்ளது. சங்ககாலத்தில் வீரர்களின் இறந்தஉடலில் தூயவெள்ளாடையைப் போர்த்தினர்.

**"...... என் சிறுவனைக்**
**கால்கழிகட்டிலிற் கிடப்பித்**
**தூவெள் எறுவைபோர்ப்பித் திலதே" (புறம் 286)**

எனும் புறநானூற்றின் பாடல் வரிகள்,வீரனின்தாய் வருந்தும் நிலையைக் காட்டுவதோடுமேற்குறித்தசெய்தியினையும் வெளிப்படுத்துகிறது.

**சாப்பறைமுழக்கல்:-**

சங்ககாலத்தில் இறந்தோரின் வீட்டில் சாப்பறைமுழங்கிக் கொண்டிருக்கும். இதற்குநெய்தல் பறைஎன்றுபெயர். இறந்தோரின் வீட்டைஅடையாளம் காட்டுவதாக இது அமைகிறது.

**தாழியிற் கவித்தல்:-**

அக்காலத்தில் இடுதல்,சுடுதல் என்ற இரண்டுமரபுகளும் வழக்கில் இருந்தன. தாழியிடுதலைக் கவித்தல் என்பர். இதனை,



Scanned by CamScanner

"......... நெடுமாவளவன்
தேவர் உலகம் எய்தினன் ஆகலின்
அன்னோன் கவிக்கும் கண்ணகன் தாழி
வனைதல்வேட்டனையாயின் எனையதூஉம்
இருநிலம் திகிரியாப் பெருமலை
மண்ணாவனைதல் ஒல்லுமோநினக்கே" (புறம் 228),
"கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெரீஇ" (புறம் 287)

எனும் புறநானூற்றுப் பாடல்கள் காட்டுகின்றன.

**நடுகல் வணக்கம்:-**

போரில் இறந்தவீரர்களுக்குக் கல்இட்டுஅவர்களைக் கடவுளாகமக்கள் வழிபட்டனர். தொல்காப்பியர் வெட்சித் திணையின் பகுதிகளில் காட்சி,கால்கோள்,நீர்ப்படை,நடுகல்,பெரும்படை,வாழ்த்துஎன்னும் நடுகல் வணக்கப்பகுதிகளைக்காட்டுகின்றார்.

இந்தநடுகல்லில் உயர்நீத்தவீரனுடையபெயரும் பெருமையும் எழுதப்பட்டிருந்தது இதனை,

"நல்லமர்க் கடந்தநாணுடைமறவர்
பெயரும் பீடும் எழுதிஅதர்தொறும்
பீலி சூட்டியபிறங்குநிலைநடுகல்" (அகம் 67)

எனும் அகநானூற்றுப் பாடல் வரிகளால் அறியலாம்.

மேலும் அது"நல்லிசைநிறுத்தநாணுடைமறவர்
நிரைநிலைநடுகல்" (அகம் 387)

என்றுநடுகல் வரிசைவரிசையாய் அமைந்து இருந்தஅமைப்பைக் காட்டுகின்றது. இந்தநடுகற்களுக்குமாலைகளும் மயிற்பீலிகளும் சூட்டப்பட்டன. கல் நடப்பட்டுஅந்த இடத்தில் துணிப் பந்தல் இடப்பட்டது. நடுகல்லிற்குவேங்கைபபூவும்,பனந்தோடும்,கரந்தைப் பூவும் சூட்டப்பட்டது. இதனைக் கீழ்வரும் புறநானூற்றுஅடிகள் புலப்படுத்துகின்றன.

"உயரிசைவெறுப்புத் தோன்றியபெயரே
மடஞ்சால் மஞ்ஞைஅணிமயிர் சூட்டி
இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்சால் பந்தர்க் கன்மிசையதுவே" (புறம் 260),
"நாகுமுலையன்னநறும்பூங் கரந்தை
விரகறியாளர் மரபிற் சூட்ட" (புறம் 261)

இத்தகையநடுகற்களுக்கு,நாள் வழிபாடுசெய்தவணங்கியுள்ளனர்அக்காலமக்கள்.இதற்கு,

"சிலையேறட்டகணைவீழ் வம்பலர்
உயர்பதுக் கிவர்ந்தததர்கொடிஅதிரல்
நெடுநிலைநடுகல் நாட்பலி கூட்டும் சுரன்" (அகம் 289)

என்றுசான்றுகாட்டுகின்றதுஅகநானூறு,புறநானூறோ,

"இல்லாகியரோகாலைமாலை
அல்லாகியர்யான் வாழும் நாளே
நடுகற் பீலி சூட்டிநாரரி
சிறுகலத் துகுப்பவும் கொள்வன் கொல்லே" (புறம் 232)

என்றுநடுகற்களுக்குக் கள் ஊற்றிவணங்கும் வணக்கநிகழ்வினைஎடுத்துக் காட்டுகிறது.

**வாள்போழ்ந் தடக்கல்:-**

சங்ககாலத்தில் மன்னர் குடும்பத்தில் பிறந்தவர்கள் போரில் அல்லாமல் நோயில் இறந்திருந்தால் அவர்களுக்குவீரர்களுக்கானவீரசுவர்க்கம் கிடைக்காதுஎன்றுஅக்காலமக்கள் நம்பினர். எனவேஅப்பேற்றினைநோயில் இறந்தமன்னர் குடிமக்கள் பெறல் வேண்டிஅவரதுஉடலைத் தருப்பைப் புல்லில் கிடத்திசிலசடங்குகள் செய்துவாளால் கீறிப்புதைத்தனர். இதனை,

"நோய்ப்பால் விளிந்தயாக்கைதழீஇக்
காதல் மறந்தவர் தீதுமருங் கறுமார்
அறம்புரிகொள்கைநான்மறைமுதல்வர்
திறம்புரிபசும்புல் பரப்பினர் கிடப்பி



Scanned by CamScanner

மறம்கந் தாகநல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலும் உய்ந்தனர்'' (புறம் 92)

என்றுஅடையாளப் படுத்தும் புறநானூறு,'வீரம்'என்றஒன்றுஅக்காலமக்களின் வாழ்வியலுக்குள் நீக்கமறநிறைந்திருக்கும் நிலையத்தெளிவாகஉணர்த்துகிறது.

**தென்புலத்தார் கடன்:-**

இறந்தவர்களுக்கு,அவர்தம் மக்கள் செய்யும் கடமை'தென்புலத்தார் கடன்'என்றுசங்ககாலத்தில் சுட்டப்பட்டுள்ளது, இது கட்டாயமானகடமையாகமக்களால் அனுசரிக்கப்பட்டது. இக்கடமைஆண்மக்களுக்கேஉரியதாக இருந்தது.

**இறந்தவீட்டில் பெண்களின் பங்கு:-**

மனிதவாழ்வில் பெண்களுக்குஉள்ளபங்குமுக்கியத்துவம் வாய்ந்ததுபோல இறப்புவீடுகளிலும் அவர்களுக்குரியபங்கு இன்றியமையாததாகிறது. மாரடித்துப் புலம்புவது,பூசலிட்டுஅழுவதும் அவர்களுக்குரியதாகஅமைகின்றன. இக்கருத்தினை

''முலைபொலியாகம் உருப்பநூறி
மெய்ம் மறந்துபட்டவரையாப் பூசல்
ஒண்ணுதல் மகளிர்'' (புறம் 10-12)

எனும் பாடல் அடிகளில் விளக்கியுரைக்கும் புறநானூறு,கணவனை இழந்தபெண்கள் கைம்மைநோன்புநோற்றலைதங்கள் கடமையாகக் கொண்டிருந்ததை,

''கூந்தல் கொய்துகுறுந்தொடிநீக்கி
அல்லியுணவின் மனைவியோடினியே
புல்லென் றனையால் வளங்கெழுதிருநகர்'' (புறம் 260),
''...... எழாநெற்
பைங்கழைபொதிகளைந் தன்னவிளர்ப்பின்
வளையில் வறுங்கை'' (புறம் 253)

எனும் அடிகளால் தெளிவுறுத்துகிறது.

கணவனை இழந்தபெண்கள் கைம்மைக்கோலம் பூண்டு,நோன்பு இயற்றினார். தங்கள் கூந்தலைக் கொய்தனர். அணிகலன்களைஅகற்றினர்.வெறும் அல்லிஅரிசிஉணவினையும். பழையசோறுடன் எள்துவையலையும் உண்டனர். பருக்கைக்கல்லாலாகியபடுக்கையில் பாயில்லாமல் படுத்தனர்.

**தீர்வுகள்:-**

1. மனிதனின் வாழ்வியலுள் 'இறப்பும்'முக்கியமானதொன்றாகஅமைகின்றது.
2. சங்க இலக்கியங்கள் இறப்புதொடர்பானவாழ்வியல் நிகழ்வுகளைத் தாங்கிநிற்கின்றன. அவைபாடைகட்டுதல்,வெள்ளறுவைபோர்த்தல்,சாப்பறைமுழக்கல்,தாழியிற் கவித்தல்,நடுகல் வணக்கம்,வாள் போழ்ந்தடக்கல் எனும் பல்வகையின.
3. இறந்தவீட்டில் புலம்பிஅழுவதும்,கைம்மைக் கோலம் பூண்டொழுகுவதும் பெண்களுக்குரியகடமையாகக் கருதப்பட்டன.



Scanned by CamScanner